நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆனி 07    (21 - 06 - 1992)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை: 124

## தமிழ்மொழி அமுலாக்கல் சீராக நடைபெறவில்லை

தமிழை அரசகரும மொழியாக ஆக்கியிருந்தும் தமிழ்மொழி அமுலாக்கல் சீராக நடைபெறாததினால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன இவற்றையும்போராடியே நீக்க வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எஸ். செல்லச்சாமி கடந்த புதன் கிழமை கொழும்பில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில், தமிழ் மொழி அமுலாக்கலுக்கென தனியாக ஆணைக்குழு ஒன்று இயங்கி வருகிறது. எனினும் தமிழ் மக்களுக்குச்சகல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்தும் சிங்களத்திலேயே கடிதங்கள் அனுப்பிவைக்கப்படுகின்றது. இத்தகைய கடிதங்கள் எவ்வளவு (4 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாடு மீது ராணுவ நடவடிக்கை

# தயார் நிலையில் முப்படைகள்

## எந்த நேரமும் தாக்குதல் நிகழலாமென கொழும்பு பத்திரிகைகள் ஹேஸ்யம்

(கொழும்பு)

யாழ்ப்பாண குடாநாடு மீது பெரியதொரு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்காக சிறிலங்காவின் முப்படைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக கொழும்பு பத்திரிகைகள் கூறுகின்றன. இராணுவ தாக்குதல்கள் எந்த நேரத்திலும் ஆரம்பிக்கப்படலாமெனவும் வடமராட்சி கிழக்கு பிரதேசம் தாக்குதலுக்கு ஆளாகலாமெனவும் இப்பத்திரிகைகள் ராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஆரூடம் கூறின.

இது இவ்வாறிருக்க வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப் பகுதியில் தொடர்ந்து துருப்புகளும், ஆயுத தளபாடங்களும் தரையிறக்கப்பட்டுவருவதாக அங்கிருந்து கிடைக்கும செய்திகள் கூறுகின்றன.

## சந்திரசேகரன் அரசியல் கைதி அல்ல

## டி.பி.விஜயதுங்கா

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன் கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிப்புடன் தொடர்புடைய நபர் ஒருவருக்கு தஞ்சம் கொடுத்தமைக்காக பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கெதிராகவும் அந்த முன்னணியைச் சேர்ந்த அப்துல் காதர் உட்பட வேறு சிலருக்கெதிராகவும் மேல் நீதிமன்றத்தில் வழககுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது இதனால் சந்திரசேகரனை அரசியல் கைதியாக கருதமுடியாது.

பிரதமர் டி. பி. விஜேதுங்க கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் இதைதெரிவித்தார்.

சந்திரசேகரனும் அவருடன் தடுத்து வைக்கபபட்டுள்ளவர்களும் மேல் நீதிமன்றத்தின் உததரவின் பிரகாரமே மகசின் சிறைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள் அவர்களது சட்டத்தரணிகள் உறவினர்கள் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது எனவும் அவர்கள்வசிப்பதற்கு பத்திரிகைகளும் வழங்கப்பட்டுள்ளன. சுதந்திரக் கட்சி எம். பி திசநாயகாவின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## சினைபபர்தாக்குதல் சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியை அண்டிய பகுதியில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர் நேற்றுக் காலை மேற்கொண்ட சினைப்பர்த்தாக்குதலில் ஓர் சிறுவன் அதிர்ஸ்ட வசமாக சிறு காயத்துடன் உயிர்தப்பினார்.

சந்நிதி றோட் கதிரிப்பாய் என்னும் பகுதியில் வசிக்கும் பி. தவக்குமார் (வயது 13) என்னும் சிறுவனே தகரம் ஒன்றனைச் சுழற்றிக் கொண்டிருக்கும் வேளை அச் சிறுவன் மீது சினைப்பர்த் தாககுதல் மேற் கொள்ளப்பட்டது. இத் தாக்குதலில் சிறுவனின் இடது கையில் சில விரல்கள் சிதறிப் போயின பின்னர் இவர் உறவினர்களினால் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப் பட்டார். (பா)

## வீரச்சாவு



வீரவேங்கை மதிவண்ணன்

18 - 06 - 1992 அன்று இடம் பெற்ற வெடி விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளியான வீரவேங்கை மதிவண்ணன் (வேலாப்போடி ஜீவரெத்தினம், மண்டபத்தடி, 3ஆம் குறிச்சி கண்ணாய் குடா மட்டுநகர்) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். (4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழர்களிடம் பணம் பறித்தவர் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தையில் தமிழர் ஒருவரின் வீ டிற்கு சென்ற வாலிபர் ஒருவர் தான் விடுதலைப் புலிகள் உறுப்பினர் என கூறி 10,000 ரூபா பணத்தை பெற்றுள்ளர்

இவ்வாறு புலிகளின் பெய

பொலிசாரினால் கைது செய்யப்பட்டபோது இவர்களுக்கு பொலிஸ் கான்ஸ் பிகள் சிலரும் உடந்தை என தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சிறில

## இனப்பிரச்சினை தீர்வாக ராஜ்ய சபைகள் முன்வைப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் இப்போது முன்வைக்கப்பட்டுள்ள திட்டம் 'பிராந்தியராஜ்ய சபை' அமைப்பது பற்றி கூறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்திலிருந்தும் கிழக்கு மாகாணத்தில் இருந்தும் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் 'பிராந்திய ராஜ்ய சபை' என்ற அமைப்பாக இயங்குவர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் வெவ்வேறாக இருப்பினும் 'பிரதேச ராஜ்ய சபை' ஒருங்கிணைந்த தனிச் சபையாக இருந்து செயற்படும்.

இரு மாகாணங்களுக்கும் தனித்தனியான இரு முதலமைச்சர்களும் ஆளுநர்களும் இருப்பர். கொள்கையை 'பிரதேச ராஜ்ய சபை' தீர்மானிக்கும் அதனை அமுல் படுத்துவது முதலமைச்சர் ஆளுநர் ஆகியோரிடம் ஒப்படைக்கப் படும்.

இதுவே புதிய யோசனையாகும் என தெரிவிக்கபடுகிறது.

## யான் ஓயாத் திட்டம் நிறைவேறியே தீரும் - ஆரியதாச

(மதவாச்சி)

யான் ஓயா திசை திருப்பு திட்டம் நிறைவேறியே தீரும்

யான் ஓயாத்திசை திருப்புத் திட்டம் நடைபெற்றதும் 3250 ஹெக்டேயர் காணிகளுக்கு நீர்ப்பாசனம் கிடைக்கும் என மதவாச்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய விளையாட்டுத்துறை ராஜாங்க அமைச்சர் திரு டி. எம். ஆரியதாசா குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தினால் பதவியாவில் 2500 ஹெக்டேயர் நிலமும் வாகல் கடயில் 750 ஹெக்டேயரும் நீர்ப்பாசனம் பெறவுள்ளது இவ்விரு நீர்த்தேக்கங்களும் மதவாச்சி தொகுதியிலேயே உள்ளன இவை முக்கிய விவசாயகுடியிருப்புகளாகும்.

## சிறிலங்கா தூதுவர்கள் கடவுச் சீட்டு வழங்கலாம்

முன்னணியைச் சேர்ந்த அப்துல் காதர் உட்பட வேறு சிலருக்கெதிராகவும் மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது இதனால் சந்திரசேகரனை அரசியல் கைதியாக கருதமுடியாது.

பிரதமர் டி. பி. விஜேதுங்க கடந்த புதன்கிழமை பாராளு வினர்கள் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது எனவும் அவர்கள்வ சிப்பதற்கு பத்திரிகைகளும் வழங்கப்பட்டுள்ளன. சுதந்திரக் கட்சி எம். பி திசநாயகாவின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# கொழும்பில் தமிழர்களிடம் பணம் பறித்தவர் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தையில் தமிழர் ஒருவரின் வீட்டிற்கு சென்ற வாலிபர் ஒருவர் தான் விடுதலைப் புலிகள் உறுப்பினர் என கூறி 10,000 ரூபா பணத்தை பெற்றுள்ளார்

இவ்வாறு புலிகளின் பெயரைச் சொல்லி தமிழர்களின் வீடுகளில் பணம்பறித்த சிலர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டபோது இவர்களுக்கு பொலிஸ் கான்ஸ் பிளகள் சிலரும் உடந்தை என தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### தோட்ட தொழிலாளரை

# சரக்குகளைப் போல கப்பலேற்ற முடியாது

(கொழும்பு)

மன்னாருக்கென கப்பல் சேவை ஆரம்பித்து விட்டதனால் மாத்திரம் இந்திய வம்சாவளியினரை சரக்குகள் போல் ஏற்றி அனுப்பிவிட முடியாது என பாராளுமன்றில நுவரெலிய மாவட்ட எம். பி. முத்துசிவலிங்கம் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் அவர்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு மதிப்பளித்தே அவர்களை அங்கு அனுப்ப வேண்டும்எனக் குறிப்பிட்டார்

இதேவேளை இந்திய கடவுச்சீட்டு வைத்திருக்கும் இந்திய வம்சாவளியினரை மன்னார் இறங்குதுறை இயங்க முடியாமல் இருப்பதால் அவர்களை திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் இருக்கிறது இவர்களை திருப்பியனுப்பும் ஏற்பாடுகள் காலகெதியில் மேற்கொள்ளப்படும்

இவ்வாறு பிரதமர் டி. பி விஜபதுங்கா கடந்த புதன் கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்ததை தெரிந்தது.

### யாழ். போதனா வைத்தியசாலை

# குழந்தைகள் விடுதிமுன் துர்நாற்றம் வீசுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தை (ஓ பி டி.) அண்டிய பகுதியில் அமைந்துள்ள குழந்தைகள் வாட்டின் முன்னால் கழிவு நீர்க் கானூடாக என்நேரமும் கழிவுநீர் செலுத்தப்பட்டவண்ணம் இருக்கிறது. இதனால் இப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. நீண்ட நாட்களாக இப்பகுதி துப்பரவு செய்யப்படவில்லை என்பது அங்கு சென்று பார்க்கும் பொழுது புரிகின்றது.

இக்கழிவு நீர்த் தேக்கத்தினால் இடப்பகுதியில் அதிகப்படியான நுளம்பு, ஈக்கள் பெருகுவதற்குவாய்ப்பு உண்டு. இதனால் இந்த வாட்டில் சிகிச்சை பெறுகின்ற குழந்தைகள் வெவ்வேறு நோய்களுக்கு ஆளாகவேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகலாம்.

இப்பகுதியினூடாக நோயாளர்களை பார்வையிட ஏனைய வாட்டுகளுக்குச் செல்பவர்கள் மிகவும் அருவருப்புடன் மூக்கைப் பிடித்துக்கொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது (பா)

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு காரணமாக குடும்பத் தலைவன் அரலிக்காய் வித்தினைச் சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கொக்குவில் மேற்கு கொக்குவிலைச் சேர்ந்த ஞானசேகரன் (25 வயது)என்ற குடும்பஸ்தரே வீட்டுத்தக

(4 ஆம் பக்கம் பார்க்க)

இது இவ்வாறிருக்க வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப் பகுதியில் தொடர்ந்து துருப்புகளும், ஆயுத தளபாடங்களும் தரையிறக்கப்பட்டுவருவதாக அங்கிருந்து கிடைக்கும செய்திகள் கூறுகின்றன.

# இனப்பிரச்சினை தீர்வாக ராஜ்ய சபைகள் முன்வைப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் இப்போது முன்வைக்கப்பட்டுள்ள திட்டம்'பிராந்தியராஜ்ய சபை' அமைப்பது பற்றி கூறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்திலிருந்தும் கிழக்கு மாகாணத்தில் இருந்தும் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் 'பிராந்திய ராஜ்ய சபை' என்ற அமைப்பாக இயங்குவர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் வெவ்வேறாக இருப்பினும் 'பிரதேச ராஜ்ய சபை' ஒருங்கிணைந்த தனிச் சபையாக இருந்து செயற்படும்.

இரு மாகாணங்களுக்கும் தனித்தனியான இரு முதலமைச்சர்களும் ஆளுநர்களும் இருப்பர். கொள்கையை 'பிரதேச ராஜ்ய சபை' தீர்மானிக்கும் அதனை அமுல் படுத்துவது முதலமைச்சர் ஆளுநர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்படும்.

இதுவே புதிய யோசனையாகும் என தெரிவிக்கப்படுகிறது.

# பிரேமதாசா தமிழ்க்குழுக்கள் சந்திப்பு கேலிக்குரியது

- குமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும எட்டுத்தமிழ்க் குழுக்களுக்கும் இடையே கடந்த பதினைந்தாம் திகதி நடைபெற்ற சந்திப்பு கேலியானதாகும் எனவும் நகைச்சுவைக்கு உரியது எனவும் குமார் பொன்னம்பலம் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி செயலகம் பதிலளித்து வெளியிட்ட அறிக்கையில், குமார் பொன்னம்பலத்தின் விரக்தி அவரது சொந்த அனுபவத்தின் வெளிப்பாடாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியுடனானசந்திப்பு திருப்திகரமானதல்ல

## -தமிழ்க்குழு பிரதிநிதி தெரிவிப்பு

(லண்டன்)

தமிழ்குழுக்களுக்கும் சிறிலங்கா ஜனாதிபதிக்கும் இடையே கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தமக்கு திருப்தியளிக்கவில்லை என அக்குழுக்களின் பிரதிநிதி ஒருவர் பி பி சி. செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு இணைப்பை சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா முற்றாக நிராகரித்தமையே இதற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு இணைப்பு என்ற வாசகம் இல்லாத எந்த ஒரு தீர்வுத்திட்டத்தையும் தாம் ஏற்கப்போவதில்லை என அப்பிரதிநிதி தம்மிடம் தெரிவித்ததாக பி.பி.சியின் கொழும்பு செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்ற தெரிவுக்குழு 29 ஆம் திகதி கூடும்

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வுக்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு மீண்டும் இம்மாதம் 29 ஆம திகதி கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

அன்று புதிய யோசனை தொடர்பாக தமது அபிப்பிராயத்தை தமிழ்க்குழுக்கள் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை தெரிவுக்குழுவினமும்கூடி ஆராய்ந்து இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை முன்வைக்கவேண்டும் என அமைச்சர் ஏ ஸி.எஸ். ஹமீட் கேட்டுள்ளார்.

# சித்தாண்டிப்பகுதியில் நான்கு தமிழர் பலி

சித்தாண்டி மேற்கு பகுதியில் விமானப்படையினர் நடத்திய தாக்குதலில் நான்கு தமிழர் கொல்லப்பட்டனர். சித்தாண்டி மேற்கு பகுதிக்குச் சென்ற பாதுகாப்பு படையினர் அங்குசென்றுவிமானப்படையினரின் உதவியுடன் இப் பொதுமக்களை கொன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

# யான் ஓயாத் திட்டம் நிறைவேறியே தீரும்

- ஆரியதாச

(மதவாச்சி)

யான் ஓயா திசை திருப்பு திட்டம் நிறைவேறியே தீரும்

யான் ஓயாத்திசை திருப்புத் திட்டம் நடைபெற்றதும் 3250 ஹெக்டேயர் காணிகளுக்கு நீர்ப்பாசனம் கிடைக்கும் என மதவாச்சியில் நடை பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய விளையாட்டுத்துறை ராஜாங்க அமைச்சர் திரு டி. எம். ஆரியதாசா குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தினால் பதவியாவில் 2500 ஹெக்டேயர் நிலமும் வாகல் கடயில் 750 ஹெக்டேயரும் நீர்ப்பாசனம் பெறவுள்ளது இவ்விரு நீர்த்தேக்கங்களும் மதவாச்சி தொகுதியிலேயே உள்ளன இவை முக்கிய விவசாயகுடியிருப்புகளாகும்.

# சிறிலங்கா தூதுவர்கள் கடவுச் சீட்டு வழங்கலாம்

(கொழும்பு)

வெளிநாட்டிலுள்ள இலங்கையர் ஒருவரின் கடவுச்சீட்டு தொலைந்து போனால் அவருக்குப் புதிய கடவுச்சீட்டு வழங்கும் அதிகாரம் அந்த நாட்டு சிறிலங்கா தூதுவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கடவுச்சீட்டுகளை தொலைத்தவர்கள் அந்நாட்டிலுள்ள இலங்கை தூதுவராலயத்தில் புதிய கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்

இதுவரைகாலமும் குடிவரவு குடியகல்பு திணைக்களம் மூலம் மட்டுமே புதிய கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டு வந்தன.

# இடம்பெயர்ந்த மக்கள் சொந்தஇடம் செல்கின்றனர்

மணலாறு குமுழமுனை பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இடங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றனர்.

சிறிலங்கா இராணுவத்தின் முப்படைத் தாக்குதல்களுக்கு உள்ளாகிய இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து சென்றிருந்தமை தெரிந்ததே.

# அம்பாறை அகதிமுகாம்களை மூடிவிட அரசு திட்டம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தங்கியிருக்கும் அனைத்து முகாம்களையும் மூடிவிடுவதற்கு சிறிலங்கா அரசு முயற்சி செய்துவருகிறது.

முகாம்களை அகற்றிவிட்டு அங்கு தங்கியிருக்கும் தமிழ் மக்கள் அனைவரையும் தத்தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப் போவதாக சிறிலங்கா அரசதரப்பில் கூறப்படுகிறது

ஆனால் இம்மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் குடியிருப்புகள் பெரும்பாலும் இராணுவத்தினதும் முஸ்லிம்களினதும் ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளன. தற்சமயம் பொத்துவில் நகர், கண்ணகிபுரம், ஆலையடி வேம்பு. தேவிபுரம் ஆகிய இடங்களில் சிறிலங்கா இராணுவத்தால் பலாத்கார குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

கண்ணகைபுரம் பகுதியில் தமிழ் மக்களின் வயல்களில் சிங்களவரும் முஸ்லிம்களும் பயிர்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியில் குடியேறும் மக்களுக்கு சிங்களவர், முஸ்லிம்களால் உயிராபத்து ஏற்படலாம் என அங்குள்ள மக்கள் அஞ்சுகின்றனர்.

# பிரதேச செயலகங்கள் நிறுவத் திட்டம்

நாட்டின் அனைத்துப் பிரதேச சபைகளிலும் பிரதேச செயலகங்கள் நிறுவப்படவுள்ளதாக கடந்த புதன்கிழமை மாகாணசபை முதலமைச்சர்கள், அமைச்சர்கள், பிரதம செயலாளர்களின் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

பிரதேச சபைகள் நிர்வாகப் பிரிவுகளாகும் பிரதேச செயலகங்கள் நிர்வாக நிலையங்களாக இருக்குமென்றும் அவர் கூறினார்.

மக்கள் தாங்கள் வாழும் பகுதிகளிலுள்ள பிரதேசசபைகள் மூலம் தங்களின் அலுவல்களைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு மக்களின் அன்றாடவாழ்க்கையைப்பாதிக்கும் சகல விடயங்களும் பிரதேச சபைகளிடம் பாரப்படுத்தப்படும்.

கடவுச்சீட்டுக்களை விநியோகிக்கும் வேலை பிரதேச

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல் இன வெள்ளடியன் 4 மாதம் நிரம்பியவை நல்இன பெண்டம் 5மாதம் நிரம்பிய கோழிகள் வெள்ளை பொம் மேரியன் 1மாதம் நிரம்பிய நாய்க்குட்டிகள் ஆண்.பெண் கந்தசாமி இன்சகீஸ் No 16 ஆடியபாதம் வீதி (நல்லூர் மார்க்கட் அருகாமையில்) கல்வியங்காடு. (2704)

### விற்பனைக்கு உண்டு

சறுத்த கைலையின் 3கிழமை பேட்டுக் கோழிக் குஞ்சுகளும், 14 போத்தல் கறக்கக் கூடிய ஜே.சி இன பசு மாடும் விற்பனைக்கு உண்டு. ஆர். எஸ். கே.பாம் முருகபதி உடுவில் சுன்னாகம். (2678)

### விற்பனைக்கு

இரும்புவேலைத்தலத்திற்கு உபயோகமான ஆயுதங்கள், சிங்கர்தையல்மெஷின், லினோனியம், தமிழ்/ஆங்கிலம் தட்டச்சுக்கள் Bottle Coolets, Deep Freezer, Air Conditione வீட்டுப்பாவனைப் பொருட்கள் - ஜெயா ஒக்ஷன்மாட், டாஸ் கொம்ப்ளெக்ஸ், 163 பிரதான வீதி, யாழ்ப்பாணம். (2687)

### பரீட்சை (ஆண்டு 5,4)

வருடாவருடம் சிறந்தபெறு பேறுகளைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப்பரீட்சை 21 06.92 ஞாயிறும், ஆண்டு 4 பரீட்சை 28.06.92ஞாயிறுப் 8 00, 11 00 நேரங்களில்நடைபெறும். புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (2705)

## கலை கலாசாரப் போட்டி

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை சன சமூக நிலையங்களின் சமாசத்தினால் இப்பகுதியில் உள்ள பதிவு செய்யப்பட்ட 64 சன சமூக நிலையங்களுக்கு இடையே எதிர்வரும் ஒக்ஸ்ட் மாதம் கலை, கலாசாரம், விளையாட்டு, சித்திரம், ஓவியப் போட்டிகளும், பேச்சு போட்டிகளும் நடாத்தப்படவுள்ளன எனச் சமாசத்தலைவர் திரு. டானியல்-அன்ரனி தெரிவித்துள்ளார்.

இப் போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் யாழ். நாவலர் வீதி கலாசார மண்டபத்தில் இயங்கும் இச் சமாசப்பணிமனையில் நேரில் தொடர்பு கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (24)

## தையல் பயிற்சி நிலையங்கள்

(கோப்பாய்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூன்று தையல் பயிற்சி நிலையங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அச்சுவேலி தெற்கு கிராம சேவகர் பிரிவு அலகு கிளை, கோப்பாய் தெற்கு கிராம சேவகர் பிரிவு, கோப்பாய் செஞ்சிலுவை சங்கப் பிரிவு அலுவலகம் ஆகியவற்றிலேயே இத் தையல் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிளையினால் ஆரம்பிக்கப்படவுள்ள இத் தையல் பயிற்சி நிலையத்தில் பயில விரும்புவோர் கோப்பாய் பிரிவு கிளைகளுடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் செயலாளர் கேட்டுள்ளார். [ச]

### 122வது ஆண்டுநிறைவு

யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் 122 வது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 22 ம் திகதி (22-06-92) திங்கட் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் (விபுலானந்தர் அரங்கு) கல்லூரி அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக திரு இ. ஜெயராஜ் கம்பன் கழக அமைப்பாளர் பங்கு பற்றவுள்ளார். கல்லூரி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (24)

## மாவீரர்கள் நினைவாக விளையாட்டுப் போட்டிகள்

2ம்லெப்டினன்ட் சங்கிலி' கப்டன் ஜெகன், வீரவேங்கைகள் சுகந்தன், அருள், சீனு ஆகிய ஐந்துமாவீரர்களினதும் இரண்டாம்ஆண்டினை நினைவு கூரும் முகமாக 06-06-92ல் கரப்பந்தாட்டப் போட்டியும்' 12-06-92 ல் விளையாட்டுப் போட்டிகளும், 13-06-92 ல் நினைவஞ்சலிக் கூட்டமும் இடம் பெற்றதும் அரியாலையில் இருக்கும்லெ.கேணல்செல்லக்கிளி அம்மான் வீடமைப்புத் திட்டத்தில் வாழும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி நிகழ்ச்சிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர் மு. வே. யோ வாஞ்சிநாதன். மற்றும் ரவி ஆகியோர் கலந்து கொண்டதுடன் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் நாடகமும் இடம் பெற்றது

## 'சார்க்' சபாநாயகர்கள் பாராளு. உறுப். இயக்கம்

(கொழும்பு)

'சார்க் சபாநாயகர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இயக்கம்' ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சார்க் சபாநாயகர்களின் இரண்டுநாள் மாநாட்டிலேயே இதனை ஆரம்பிப்பது பற்றி தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த இயக்கத்துக்கான அமைப்பு விதிகளை சார்க் பாராளுமன்றங்களின் செயலாளர் நாயகங்களைக் கொண்டு அமைக்கவும் இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இச் சார்க் சபாநாயகர்களின் அடுத்த மாநாடு பங்களாதேஷில் அடுத்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ளது.

சார்க் நாடுகளுக்கிடையில் அடிக்கடி கூட்டங்கள்' கலந்துரையாடல்கள், மாநாடுகள் நடாத்தவும் விஜயங்களை மேற்கொள்ளவும் பாராளுமன்ற விவகாரங்களை பரிமாறிக் கொள்ளவெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பிரச்சினைக்கு தீர்வுகாண இறுதிசந்தர்ப்பம் இதுவே

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு கடைசி சந்தர்ப்பம் இதுவே என்றும், அதற்கு தீர்வுகாண சகலரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் பாராளுமன்றத்தில் தமிழ் எம்.பி.ஒருவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டு ஒருவருடமாகியுள்ள போதும், அது இது வரை எந்தத் தீர்வையும் முன் வைக்கவில்லை எனவும், இக்குழுமீது தமிழர்களின் நம்பிக்கை தற்போது ஊசலாடிக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## 3-ம்ஆண்டு நினைவஞ்சலி



JAFFNA COLLEGE

# INSTITUTE OF TECHNOLOGY

VADDUKODDAI

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையிலும் முழுநேரப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன

வட்டுக்கோட்டையில் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள்

### 1. Technician Diploma Course

I) Civil Engineering - காலம் 2 வருடங்கள்
II) Electronics & Communication Engineering - காலம் 3 வருடங்கள்
III) Mechanical Engineering - காலம் 3 வருடங்கள்
IV) Electrical Engineering - காலம் 3 வருடங்கள்

கல்வித் தகைமை : G C.E. (O / L) கணிதம் - C, விஞ்ஞானம் - C ஆங்கிலம் - S உட்பட 6 பாடங்களில் சித்தி

### 2. Diploma Course - காலம் ஒரு வருடம்

I) Draughtsmanship (Civil)
II) Computer Programming & Data Processing

கல்வித் தகைமை : G. C. E. (O / L) கணிதம் C உட்பட 6 பாடங்களில் சித்தி

### 3. Technician Certificate Course

I) Radio and T. V. Servicing - காலம் 1 வருடம்
II) Air - Conditioning and Refrigeration - காலம் 1 1/2 வருடம்
III) Automobile Technology - காலம் 1 வருடம்

கல்வித்தகைமை : G. C. E (O / L), கணிதம் S விஞ்ஞானம் S

### 4. Craft Certificate Course (தமிழ் மூலம்)

i) ஒட்டுனர், கட்டுமானர், பொருத்துனர் பயிற்சி - காலம் 6 மாதங்கள்
Welding, Fabrieation and Fitting
II) மின்னிணைப்பு பயிற்சி - காலம் 1 வருடம்
Electrical Wiring and Installation Practice

## நினைவு கூருகின்றோம்...

## 1992-06-21

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

★ மனோ மதன் [கிருஸ்ணசாமி முனுசாமி - உயிலங்குளம், மன்னார்.]

1987 ஆம் ஆண்டு லக்ணாவத்தையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

சுதா [தெய்வேந்திரம் செல்வானந்தராசா - மானாங்காணை, வல்வெட்டித்துறை ]

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் தேசவிரோத சக்திகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

நித்தி [க. விநாயகமூர்த்தி - மட்டக்களப்பு]

வவுனியா மரக்காரம்பளைப் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

கப்டன் சுதா [முத்துமாணிக்கர் சுதானந்தன்-பண்டாரிகுளம், வவுனியா.]

பெனா | தயாபரன் [கனகசிங்கம் நல்லநாதன் - ஈச்சங்குளம், கல்மடு,. வவுனியா.]

வவுனியா / ஓமந்தை, கொந்தக்காரன் குளம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாகுதலில் வீரச்சாவெய்திய -

கார்த்திக் [சின்னத்துரை பரந்தாமன் - 'தாயகம்', கற்சிலையடி, கச்சிலைமடு, முல்லைத்தீவு.]

கப்டன் சிவா [செல்வரத்தினம் - பாலப்பெருமான் கட்டு, வட்டக்கண்டல், மன்னார்.]

இராமகிருஸ்ணன் [பாலசாமி ஞானசேகரம் - கரம்பைக்குளம், அடம்பன், மன்னார் ]

பூட்டோ [சாத்தலிங்கம் சிறிதரன்- துணுக்காய், மாங்குளம்' முல்லைத்தீவு.]

அரசன் [வடிவேல் ரவிச்சந்திரன் - அனந்திநகர், பனை.]

1990 ஆம் ஆண்டு மன்னார் கொண்டச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய -

ரமணி [மட்டக்களப்பு]

குவேந்திரன் [மணலாறு]

மேஜர் வசந் [போல்விக்ரர் விஜயதேவா - நறுவிலிக்குளம், வங்காலை, மன்னார்.]

கப்டன் தனபால் [பொன்னுத்துரை சிறிரங்கநாதன் - பள்ளிக்குடா, பூநகரி, மன்னார்.]

லெப். சுப்பிரமணி [கதிரவேல் சுப்பிரமணியம் - பரப்புக்கடந்தான், வட்டைக்கண்டல், மன்னார்.]

லெப். கபாலி [தாவுதுப்பிள்ளை நாகராசா]

டிக்கன்ஸ் [குலராஜசிங்கன் சர்வேசன் - உயிலங்



## வீரவேங்கை கார்த்திக்
### (சின்னத்துரை பரந்தாமன்)

மண்ணின் முத்தாக 30. 12. 1969 — விடுதலையின் வித்தாக 21 06. 1989

சையினில் வேசமும் கருத்தினி லோர்மமும்
செய்கை யில் விடுதலை வேங்கை நீ செம்மலே
வையகம் பிறழினும் வற்றிடாக் கொள்கையின்
கையது செம்மையால் களித்திடப் போயிட்டாய்
கோரிய குணமதில் கோழைகள் பதுங்கியே
வீரனாம் உன்னையும் . . . ஓ . . . மாவீரனே
உன் வெம்பசி ஆரடா அடக்குவர் . . .

மலரட்டும் தமிழீழம்

21. 6. 1989 அன்று வவுனியா கோழிய குளத்தில் இந்தியப்படையுடனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவி நீ பிறந்த மண்ணான மாவீரன் பண்டாரவன்னியனின் அடிமைப்பற்று மண்ணுக்கு பெருமை தேடித் தந்த வீரமறவனே இந்நாளில் உன்னை நினைவு கூர்வதோடு அன்றைய தினம் வீரச்சாவை தழுவிக்கொண்ட ஏனைய மாவீரர்களையும் நினைவுகொள்கின்றோம்.

மாவீரனான உன் மலரடியை
நினைவு கூரும்
அம்மா, ஐயா, சகோதர
சகோதரிகள், அத்தான் மார்
அண்ணிமார், மருமக்கள்
பெறாமக்கள், உறவினர்கள்
நண்பர்கள்

''தாயகம்''
கற்சிலைமடு
21. 6. 1992

[2702]

---

II) மின்னிணைப்பு பயிற்சி - காலம் 1 வருடம்
Electrical Wiring and Installation Practice

❋ கல்வித்தகைமை : G. C. E. (O / L) வரை படித்திருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும்

**பயிற்சி நெறிகள்** - [வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக]

**1. Technician Diploma Course**

i) Civil Engineering - காலம் - 2 வருடங்கள்
ii) Electronics & Communication Engineering - காலம் - 3 வருடங்கள்
iii) Mechanical Engineering - காலம் - 3 வருடங்கள்
iv) Electrical Engineering - காலம் - 3 வருடங்கள்

❋ கல்வித்தகைமை: G. C. E. (O/L) - கணிதம் - C, விஞ்ஞானம் - C, ஆங்கிலம் - S, உட்பட 6 பாடங்களில் சித்

**2. Diploma Course** - காலம் - 1 வருடம்

i) Draughtsmanship (Civil)
ii) Computer Programming & Data Processing

❋ கல்வித்தகைமை; G. C. E (O/L) கணிதம் - C, உட்பட 6 பாடங்களில் சித்தி

**3. Advanced Diploma in Computing** - காலம் -1வருடம்

Syllabus includes British Computer Society & Australian Computer Society

❋ கல்வித்தகைமை: G. C. E (O/L) கணிதம் - C, ஆங்கிலம் S, உடன் A/Lஇல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி

குறிப்பு :- விண்ணப்பப்படிவம் விலை ரூபா 10/-
பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள் :
a) J. C. I. T. அலுவலகம் வட்டுக்கோட்டை
b) 182, 1st Cross Street, யாழ்ப்பாணம்

பெற்றோருடைய வேண்டுகோளுக்கிணங்க
விண்ணப்ப முடிவுத் திகதி 26 6-92 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சை — திகதி: 29-06 92, 30-06-92
நேரம்: மு. ப 9.0 முதல் பி.ப 2.00வரை
இடம் : J. C. I. T. வட்டுக்கோட்டை

- பணிப்பாளர்

(சி/4576)

---

பரப்புக்கடந்தான், வட்டைக்கண்டல், மன்னார்.]
**லெப். கபாலி** [தாவுதுப்பிள்ளை நாகராசா]
**டிக்கன்ஸ்** [குலராஜசிங்கன் சர்வேசன் - உயிலங்குளம், மன்னார்.]
**சுமித்திரன்** [மாடாசாமி ராஜரத்தினம் - சின்னப் பாப்பாகடை, தலைமன்னார், மன்னார்.]
**சாந்தா** [கருப்பையா கண்ணன் - புகையிரத நிலையத்தடி, தலைமன்னார், மன்னார்.]
**பஞ்சன்** [அந்தோனிப்பிள்ளை ராஜன் வேந்தக்கோன் - மாளிகைப்பிட்டி, முருங்கன், மன்னார் ]
**மேனன்** [கிருஸ்ணா சத்தியமூர்த்தி - பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல், மன்னார்.]
**லெப் கோபிநாத்** (வடிவேல் ஜெயராஜ் - இல: 124, 2 ஆவது பண்ணை, செட்டிக்குளம், வவுனியா ]
**பயஸ்** [கந்தசாமி கருணேந்திரன் - மயிலிட்டி, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் ]

மன்னார் பேசாலைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட கண்ணிவெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

**2-ம் லெப். கிறிஸ்ரின்** [அல்போன்ஸ் விபேரியஸ் கிராய்வா - 3 ஆம் வட்டாரம், கடற்கரைவீதி, பேசாலை, மன்னார் ]

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு பெரியநீலாவணை - 1 ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன், மற்றும் மட்டக்களப்பில் வேலைக்குச் சென்று காணாமல் போன குமரபுரம், புன்னைச்சோலையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

திருக்கோணமலை கந்தளாய்ப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 13 தமிழர்கள், மற்றும் கல்லோயா ரயில் நிலையத்திலிருந்து சிங்களக் காடையர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டக்களப்பு புகையிரத நிலைய விடுதி வாசிகளான 3 தமிழர்கள்.

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் படகில் பயணம் செய்து கொண்டிருந்தபோது சிறிலங்காப் படையினரால் மூழ்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த தமிழ் விவசாயி.

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4579)

## சிந்தனைக்கு

தீமையை வெறுப்பதோடு திருப்தி அடையாமல் தீமையைப் போக்கி, அதனிடத்தில் நல்லதை நிலை நாட்ட ஊக்கத்துடன் பாடுபவனே, உண்மையான சீர்திருத்தவாதி — சார்லிஸ்ஸிம்மன்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 21-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# ஒப்பந்த மீறல்கள் தொடர்கின்றது

"மக்கள் குடியிருப்புக்கள், ஆலயங்கள், பாடசாலைகள் மீது கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டாம் என அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுவது பயனற்றதாகி விட்டது" இவ்வாறு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார். மேலும், "தாக்குதல்களினால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதும், சொத்துக்கள் நாசமாக்கப்படுவதும் அவர்கள் அனைவரும் நன்கறிந்த விடயமே. அப்படியிருந்தும் அவர்கள் திட்டமிட்டுக் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தும்போது அவற்றைநிறுத்துமாறு நான் வேண்டுகோள் விடுவதால் இனிப் பயனேதும் ஏற்படப் போவதில்லை" எனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் பொதுமக்கள் மீதும், அவர்களின் உடைமைகள் மீதும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடத்தப்படுவதாக இதுவரை தமிழ் மக்களும், பொது ஸ்தாபனங்களும் தெரிவித்து வந்த குற்றச்சாட்டைச் சிறிலங்கா அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. அவை யாவும் உண்மையல்ல எனவும் சிறிலங்கா அரசாங்கம் மறுத்து வந்ததோடு, பொதுமக்கள் மீதும், பொது ஸ்தாபனங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படவில்லை, புலிகளின் நிலைகளின் மீதே தாக்குதல்கள் நடத்தப்படுவதாக சாதித்தும் வந்தது.

தற்பொழுது சிறிலங்காவின் அரச பிரதிநிதியே பொதுமக்களின் குடியிருப்புக்கள், ஆலயங்கள், பாடசாலைகள் மீது தாக்குதல்கள் நடைபெறுகின்றது அதுவும் திட்டமிட்ட முறையில் நடைபெறுகின்றது எனத் தெரிவித்துள்ளார். அதாவது திட்டமிட்ட ரீதியில் இனப்படுகொலைகள் இடம்பெறுவதை அரச அதிபர் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

யாழ். அரச அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளமை அவரின் ஆற்றாமையின் வெளிப்பாட்டையே காட்டுவதாக உள்ளது. தாக்குதல் குறித்து மக்களின் மகஜர்களையும், செயலகத்தின் அறிக்கைகளையும் தொடர்ந்து அனுப்பி வெறுப்படைந்த பின்னரே அரச அதிபர் தனது இக்கருத்தை வெளியிட்டுள்ளார். அதாவது சிங்களப் பேரினவாதத்தின் திட்டமிட்ட இனப்படுகொலையை வெளிக்காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் தவிர்க்க முடியாது அவருக்கு ஏற்பட்டு விட்டதெனலாம்.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் யுத்தத்தில் எவ்வாறு ஆலயங்கள் ஆஸ்பத்திரிகள் அகதிமுகாம்கள்

# தமிழகத்தில் ஆட்சி நடக்கவில்லை பிறைவேட் கம்பெனி வியாபாரம் நடக்கிறது

## எம்.எல்.ஏ. தாமரைக்கனி ஆதங்கம்

தமிழக சட்டசபையில் தனித்த ஒரே ஒரு சுயேட்சை உறுப்பினரான தாமரைக்கனி அண்மையில் ஜெயலலிதா அமைச்சரவையை பதவிநீக்கம் செய்யவேண்டுமெனக் கோரும் மனுவொன்றை தமிழக ஆளுநரிடம் கையளித்துள்ளார். இம்மனுவின் பிரதிகள் பிரதமர் பி.வி நரசிம்மராவ் மற்றும் குடியரசுத் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது

'டான்ஸி' நிலம் வாங்கிய விவகாரத்தில் முதல்வர் என்ற வகையில் தமக்கிருக்கும் அதிகாரத்தை ஜெயலலிதா முறைகேடாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் என்பதுவே தாமரைக்கனி கையளித்திருக்கும் மனுவில் குறிப்பிடப்பட்டிருக்கும் முக்கிய விவகாரம் ஆகும் எனினும் சுயேட்சை உறுப்பினரான தன்னை ஆளும் கட்சியினர் மதிப்பதில்லை எனவும், தன்னைப் பயன்படுத்திசில காரியங்களை சாதிக்க ஆளுங்கட்சி முற்படுவதாகவும், தமது தொகுதியின் நலத்திட்டங்களுக்கு அமைச்சர்களும், அதிகாரிகளும், ஒத்துழைப்பு தருவதில்லை எனவும் தாமரைக்கனி கருத்து வெளியிட்டிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

தமிழக ஆட்சி பற்றி வர்ணித்த தாமரைக்கனி மேலும் கூறுகையில் "இப்போ எல்லாமே பக்திப்படம் ஓடற மாதிரி மகமாயி .. மாரியாத்தான்னு புகழ்ந்தால் தான் பேச அனுமதிப்பார்கள். எதிர்த்துப் பேசினால் சென்ஸார் பண்ணி உட்கார வைச்சிடுவாங்க இன்னும் எத்தனை நாளைக்கு இந்த சினிமா ஓடும்னு தெரியலை. ஆனா... நல்லா பொழுது போகுது. பிரயோஜனம்தான் இல்லை. கவர்ன்மென்ட் என்பதையே ஏதோ பிரைவேட் கம்பெனி மாதிரி பாட்னெர்ஸ் சேர்ந்து நடத்துறாங்க. லாபம் மட்டும் தான் குறிக்கோள். பணம் கொடுத்தா எதுவும் நடக்கும். கம்பெனிக்கு விளம்பரமும் தூள்பறக்குது. டான்ஸி விவகாரத்தில் நடந்தது ஒருமோசமான முன்னுதாரணம்" என்றும் கூறியுள்ளார்.

இதனால்தான் ஆளுநரிடம் மனுவைக் கொடுத்தாகக் கூறும் தாமரைக்கனி, சமீபத்தில் விடுதலையான சில ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளையும், சமூக விரோதிகளையும் தூண்டிவிட்டு தன்னைக் கொல்ல சதித்திட்டம் போடப்பட்டிருப்பதாகவும், தமக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் அதற்கு முதல்வர் ஜெயலலிதாவும் அவரது ஆட்சியும்தான் முழுப்பொறுப்பு என்றும் தெரிவித்துள்ளார்.

திரு தாமரைக்கனி, பொதுத் தேர்தலின் போது அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிட விரும்பிய போதும், அதற்கு சீட் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் சிறீ வல்லிபுத்தூர் தொகுதியில் சுயேட்சையாக போட்டியிட்ட தாமரைக்கனியைத் தோற்கடிக்க ஜெயலலிதா மூலைமுடுக்கெல்லாம் சென்று பிரசாரம் செய்த போதும் அவர் வெற்றிபெற்று சட்டசபை உறுப்பினரானார். வெற்றி பெற்ற பின்னரும், ஜெயலலிதாவிடம் ஆசிபெறச் சென்ற தாமரைக்கனியிடம் பதவி துறக்கும் படியும் இடைத்தேர்தலின் போது இரட்டை இலைச் சின்னம் அவருக்கு, ஒதுக்குவதாகவும் கோரியிருந்தாராம்.

செக்கோசெலவாக்கியா இருநாடாகிறது

# செக்-ஸ்லவோக்கிய தலைவர்கள் பிரிந்து செல்ல இணக்கம்

(ப்ராகா)

செக்கோசெலவாக்கியாவின் செக், மற்றும் ஸ்லவோக் ஆகிய இரு இன மக்களும் தனித்தனி நாடுகளாகப் பிரிந்து கொள்வதற்கு இரு இனத் தலைவர்களும் ஒப்புதல் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

இதன் மூலம் கடந்த எழுபத்து நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக இணைந்திருந்த செக்கோசெலவாக்கியா பெடரேசன் கூட்டரசு அமைப்பு முடிவுக்கு வருகின்றது.

செக்கோசெலவாக்கியாவைச் சிறப்பான இரு நாடுகளாக எவ்வாறு பிரித்துக் கொள்வது என்பது தொடர்பாக இரு இனங்களின் தனித்தனிப் பாராளுமன்றங்களுக்கும் இடையே இணக்கம் காணப்படவுள்ளது.

நேற்று செய்தியாளர் மாநாட்டில் பேசிய 'செக்' இனத் தலைவர்களான ராட்லி பிளாஸ்த் 'ஸ்லவோக்' இனத்தலைவரான விளாடிமிர் மெசியாரும் கூட்டாகப் பேசுகையில் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இதற்கான சட்ட பூர்வமான நடவடிக்கைகள் செப்டம்பர் 30 ஆம் திகதியன்று தொடங்கும் எனவும் அவர்கள்கூறினர். இரண்டு தனித்தனியான நாடுகளாகப் பிரிக்கப்படும் வரையில் செக்கோ செலவாக்கிய பெடரல் அமைப்பின் கீழ் நிர்வகிக்கப்படவுள்ளது.

# இந்தியாவுக்கு உதவிவழங்குவதற்கு ஜப்பான் நிபந்தனைவிதிக்கவில்லை

## புதுடில்லியிலுள்ள ஜப்பானிய அதிகாரி தகவல்

[டில்லி]

இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவி வழங்குவதற்கு அணு ஆயுதப் பரவல் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட வேண்டும் என்று ஜப்பான் நிபந்தனை விதித்துள்ளது என்ற செய்தியை ஜப்பான் மறுத்துள்ளது

நேற்று முன்தினம் புதுடில்லியிலுள்ள ஜப்பானிய தூதரகத்தின் பொருளாதாரப்பிரிவு அதிகாரியான திரு. அர்ரிஷி அமது பற்றிய எந்த தகவலும் இல்லை எனத் தெரிவித்தார்.

எனினும் டோக்கியோவில் இருந்து இப்படியொரு செய்தி வெளியாகிஇருப்பதுஜப்பானிய அரசாங்கத்தின் கொள்கையினை திரித்துக் கூறும் செயலாகும் என செய்தியாளரிடையே பேசும் போது தெரிவித்தார்.

வளர்ச்சிக்கான உதவியை அணு ஆயுத பரவல் தடுப்பு முன்னேற்றம் எதுவும் தென்படவில்லை எனக்கூறியதுடன் மாறாக இருதரப்பு தொடர்புகளை வலுப்படுத்துவதற்குஇந்தியாவின் தாராளமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கை ஆதரவாக இருக்கிறது என ஜப்பானிய தூதரக அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்திய வெளிபுறவு அமைச்சரக அதிகாரியும் இச்செய்தி எந்த ஒரு உண்மையான தக

பொஸ்னியாவில்

# புதியயுத்தநிறுத்தஉடன்பாடு கைச்சாத்திடப்பட்டது

(பெல்கிரேட்)

பொஸ்னியா- ஹெர்ஸகோவினாவில் இரண்டு மாதங்களுக்குமேல் நடைபெற்று வரும் மோதலைத் தவிர்க்கும் புதிய யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்றில் இருதரப்பினரும் கைச்சாத்திட்டுள்ளனர்.

பொஸ்னியா சுதந்திரத்தை எதிர்க்கும் சேர்பிய பாராதுருப்புக்களின் பிரதிநிதிகளும் முஸ்லிம், குரோசிய பாதுகாப்பு படையினரும் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிமுதல் யுத்த நிறுத்தம் செய்யும் உடன்பாட்டைச் செய்து கொண்டனர். இந்த ஒப்பந்தம் சரஜிவோவிலுள்ள ஐ நா. தலைமைக் காரியாலயத்தில் கைச்சாத்திடப்பட்டது.

ஐ.நா. தடை அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து யுத்தத்தை முடிக்கும்படி சேர்பியர்கள் மீது நிர்ப்பந்தம் அதிகரித்து வந்திருக்கிறது.

# கனடாவுடன் ரஷ்யா ஒப்பந்தங்களில் கைச்சாத்து

(ஒட்டாவா)

கனேடிய பிரதம மந்திரி பிறெய்ன் மல்ரூனியும் கனடாவுக்கு விஜயம் செய்துள்ள ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சினும் ஐந்து ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஒப்பந்தங்கள் இருநாடுகளுக்கிடையிலான உறவுகளின் வெற்றிகரமான வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமையும் என கனேடிய பிரதம மந்திரி அலுவலகத்தில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ரஷ்யாவின் அணுமின் ஆலையினது பாதுகாப்பை அபிவிருத்தி செய்வதற்கு சுமார் இரண்டு கோடி ஐம்பது இலட்சம் டொலர் செலவாகும் மூன்றாண்டுத் திட்டம் ஒன்றை கனடா பொறுப்பேற்றுள்ளது.

# ஷெரீப்பிடம் பிரிட்டன் வலியுறுத்து

# ராஜீயப் பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு அளிக்குக

இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் யுத்தத்தில் எவ்வாறு ஆலயங்கள் ஆஸ்த்திரிகள் அகதிமுகாம்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல்கள் நடத்தக் கூடாது என்ற யுத்த தர்மத்தைக் கடைப்பிடிக்காதது போலவே ஒப்பந்தங்கள் உடன்பாடுகள் என்பனவற்றையும் கடைப்பிடிப்பதில்லை. அண்மையில் கீரிமலை, சேந்தான்குளம் பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையும் ஒரு ஒப்பந்த மீறலே ஆகும்.

காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருள்களை கொண்டுவருவதற்காக சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னிலையில் ஏற்பட்ட ஒரு உடன்பாட்டின்படி சேந்தான்குளப்பகுதி யுத்த சூன்யப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதில் விடுதலைப்புலிகள் ஆயினும் சரி, இராணுவமாயினும் சரி ஒரு இராணுவ நடவடிக்கையை இப்பகுதியில் நடத்துவதானால் 72 மணி நேர முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே விடுதலைப் புலிகள் அப்பகுதியில் இருந்து கண்ணி வெடிகளை அகற்றியதோடு, பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தளர்த்தினர் போக்குவரத்திற்கான பாதையும் சீர் செய்திருந்தனர். ஆனால், இராணுவம் இதனைத்தனக்குச் சாதகமாகப்பயன்படுத்தி, எதுவித முன்னறிவித்தலுமின்றி சேந்தான்குளப்பகுதி மீது படையெடுத்தது.

இதேபோன்றே யாழ் ஆஸ்பத்திரியைச் சூழவுள்ள பாதுகாப்பு வலயத்தின் மீது தாக்குதல் நடத்துவதில்லை எனச் சிறிலங்கா அரசாங்கம் அளித்திருந்த உத்தரவாதத்தையும் மீறியது. இவ்வலயத்தைச் சூழவுள்ள பகுதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களினால் பாதுகாப்பு வலயத்தினுள் எறிகணைச் சிதறல்கள் பாய்ந்தன. இதுவும் சிறிலங்கா அரசு மேற்கொண்ட ஒப்பந்த மீறலே ஆகும். ஆனால் இதனை சிறிலங்கா அரசு மறுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை ஆனால் அது ஏற்பதற்கில்லை. அவ்வாறு அதை ஏற்பதாயின் அது பாதுகாப்பு வலயத்திற்கு, வெளியில் நின்று கொண்டு உள்ளே நிற்பவரை துப்பாக்கியால் சுடுவதை ஏற்றுக் கொண்டது போல் ஆகும்.

அதாவது, சிறிலங்கா அரசாங்கத்தின் இனப்படுகொலைகளும், ஒப்பந்த மீறல்களும் நன்கு திட்டமிட்ட செயலாகும். ஆகையினால், யாழ். அரச அதிபர் குறிப்பிட்டது போன்று சிறிலங்கா அரசாங்கத்திற்கு இவற்றைத் தெரியப்படுத்துவதனால் பயனேதும் ஏற்படப் போவதில்லை. இந்நிலையில் இன அழிப்பிலிருந்து தமிழினம் தப்பித்துக் கொள்ள தமிழினத்திற்கு ஒரே வழி விரைவில் விடுதலையை நோக்கி முன்னேறுவது ஒன்றே.

---

...யிலுள்ள ஜப்பானிய தூதரகத்தின் பொருளாதாரப்பிரிவு அதிகாரியான திரு. ஆர்ரிஷி தமது அரசாங்கத்திடம் இருந்து இது...

...வளர்ச்சிக்கான உதவியை அணுஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்துடன் இணைத்துப் பேசவேண்டிய அளவுக்கு இந்தியாவின் அணுசக்தி அபிவிருத்தித் திட்டத்தில் குறிப்பாக...

இந்திய வெளியுறவு அமைச்சரக அதிகாரியும் இச்செய்தி எந்த ஒரு உண்மையான தகவலின் அடிப்படையிலும் அமையவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

---

### காவிரி நீர் பங்கீடு

# கண்காணிப்பு குழு நிறுவுவதை கர்நாடகம் ஏற்றுக் கொள்ளாது

## - பங்காரப்பா அறிவிப்பு

(பெங்களூர்)

காவிரி ஆற்றின் நீர்வளப் பங்கீடு தொடர்பான நீதிமன்ற இடைக்கால உத்தரவை அமுலாக்குவது பற்றிக் கண்காணிப்பு அமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு கர்நாடக மாநில அரசு ஒப்புக்கொள்ளாதென கர்நாடக முதல்வர் எஸ். பங்காரப்பா திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

பெங்களூரில் நேற்றுக்காலை செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், இடைக்கால தீர்ப்பை புறக்கணித்திடும் மாநில சட்டமன்றத்தின் தீர்மானத்திலிருந்து பிறழ்ந்து செல்வதற்கு தம்முடைய அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது எனவும் மத்திய அரசிடமிருந்து தமக்கு இரு கடிதங்கள் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இக் கடிதங்களில் ஒன்று தமிழக முதல்வர் மத்திய அரசுக்கு எழுதிய வற்புறுத்தல் கடிதத்தின் நகல் எனவும், மற்றது கண்காணிப்பு அமைப்பு நிறுவுவது பற்றி மாநில அரசின் கருத்தைக் கோரியது எனவும் தெரிவித்தார்.

மேலும் பேச்சுவார்த்தைகள் வாயிலாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கை தமக்கு இன்னமும் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

---

### ஆப்கானிஸ்தானில்

# இந்திய வம்சாவளியினர் பழி வாங்கப்படுகின்றனராம்

## - இந்தியா கவலை

(டில்லி)

இந்திய வம்சாவளி ஆப்கானிஸ்தான் குடிமக்கள் இந்துக்கள் அல்லது சீக்கியர்கள் என்ற காரணத்திற்காக பழி வாங்கப்படுகிறார்கள் என்ற செய்தி குறித்து இந்தியா தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

அவர்களின் சொத்துக்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன களவாடப்படுகின்றன கொல்லப்படுகின்றார்கள் என்ற செய்தி தொடர்பாக கருத்து வெளியிட்ட வெளியுறவு அதிகாரி ஒருவர் ஆப்கான் அரசாங்கத்திடம் இது பற்றி எடுத்துரைத்து இந்தியர்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு கோருமாறு காபூலில் உள்ள இந்தியத் தூதுவரிடம் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

---

### ஜனாதிபதி தேர்தல்

# பொதுவேட்பாளரை நிறுத்த எதிர்க்கட்சிகள் முயற்சி

[டில்லி]

இந்திய ஜனாதிபதி தேர்தலில் பொதுவான எதிர்க்கட்சி வேட்பாளர் ஒருவரை நியமிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள உள்ளதாகவும் அனேகமாக பேராசிரியர் ஜி.பி. இல் எதிர்க்கட்சியின் சார்பில் நிறுத்தப்படலாம் என ஜனதாதள் அறிவித்துள்ளது.

தேசிய முன்னணி, இடதுசாரிக் கட்சிகளை கலந்து ஆலோசித்த பின்னர் இது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும், கட்சியின் மூத்த தலைவர்களின் கூட்டத் தொடருக்குப் பிற்பாடு செய்தியாளர்களிடம் பேசிய ஜனதாதள் செய்தித் தொடர்பாளர் திரு. சுரிகிஷோர்சிங் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் பற்றி தீர்மானிப்பதற்கு ஜனதாதள் தேசிய செயற்குழு நேற்றுக் கூடியது.

மேலும் எதிர்க்கட்சியினரிடையே பொதுக் கருத்தொன்றினை ஏற்படுத்த ஜனதாதள் எல்லா வகையிலும் முயற்சி செய்யும் எனவும் தெரிவித்தார்.

---

# பாதுகாப்பு அளிக்குக

பாகிஸ்தானிலுள்ள ராஜீயப் பிரதிநிதிகளுக்கு போதிய பாதுகாப்பு அளிக்க உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு பாகிஸ்தானிய பிரதமர் நவாஷெரிபபை பிரித்தானியா பிரதமர் ஜோன் மேயர் கேட்டுள்ளார்.

கடந்த மாதம் இந்திய ராஜீய பிரதிநிதி கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டது. அண்மையில் மேலும் ஒரு ராஜீய பிரதிநிதி தாக்கப்பட்டது உட்பட பல சம்பவங்கள் பற்றியும் ஜோன் மேயர் நவாப் ஷெரிப்பை கேட்டுள்ளார்.

# தனியார் மயப்படுத்தல் ரஷ்யாவில் நடைமுறையில்

[மொஸ்கோ]

ரஷ்யா பாரிய அளவில் தனியார் மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு ஆயத்தமாகி வருகின்றது என ரஷ்ய நிதி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மூன்றில் இரண்டு பங்கு அரசாங்க நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதற்கான திட்டங்கள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் ஐந்து வருட காலத்தில் இதனை நிறைவேற்றி வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும்.

1992ஆம் ஆண்டு தனியார் மயப்படுத்தும் திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் இது வரலாற்றில் ஒருமுக்கியமான திட்டமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

---

# அயர்லாந்து ஆதரவு

(அயரிஷ்)

ஐரோப்பா முழுவதும்ஒரே நாணய முறையைக் கொண்டு வருவதற்கு வழிசெய்யும் உடன்படிக்கையொன்றிற்கு அயர்லாந்து ஆதரவு தெரிவித்துள்ளது. கடந்த வியாழனன்று நடந்த கருத்துக் கணிப்பில் இரண்டுக்கு ஒன்று விகிதத்தில் அயர்லாந்து மக்கள் தமது ஆதரவை தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

# அணு ஆயுத பரவல் தடுப்பு டில்லி மீண்டும் நிராகரிப்பு

(டில்லி)

அணு ஆயுதப் பரவலைத் தடை செய்யும் உடன்படிக்கையொன்றினை இந்தியா மீண்டும் நிராகரித்துள்ளது. ஆனால் இவ்விடயம் சம்பந்தமான பிரச்சினையை அமெரிக்காவுடன் அல்லது பாகிஸ்தானுடன் இருதரப்பு அடிப்படையில் விவாதிப்பதற்கு இந்தியா தயாராக இருக்கிறது

இவ்வாறு தற்போது இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க தூதுக் குழுவிடம் இந்தியா எடுத்துரைத்தது என வெளிநாட்டு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இந்தியா தனது நிலைபபாடு பற்றி இரண்டு நாட்களாக நடைபெற்ற பேச்சுக்களின்போது இதை மீண்டும் வலியுறுத்தியதாக இந்திய சிரேஷ்ட அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

ஆயுதப் போட்டி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து இரு தரப்பினரும் விரிவாகக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈழநாதம்

# ராமதாஸ் உட்பட கைதானோர் விடுதலை செய்ய உத்தரவு

(சென்னை)
அண்மையில் தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதனால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்ட அனைவரையும் விடுதலை செய்வதற்கு மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

சென்னையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மாநிலத்தில் நிலவும் சட்ட ஒழுங்குகளின் நிலைமை பற்றி ஆலோசனை நடாத்திய பின்னர்காவலில் வைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுதலை செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸும் அக்கட்சியின் தொண்டர்களும் விடுதலை செய்யப்படுவார்கள் என சென்னை பொலிஸ்வட்டாரங்களில்தெரிவிக்கப்படுகிறது.

## இஸ்தான்புல் மாநாட்டில் காஷ்மீர் விவகாரம் புதுடில்லிகவலை

[இஸ்தான்புல்]
இஸ்தான்புல்லில் நடைபெற்ற இஸ்லாமிய மாநாட்டு ஸ்தாபனத்தைச் சேர்ந்த நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் அவசர கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இறுதி அறிக்கையில் காஷ்மீர் விடயமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயத்தை இவ் அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப் பட்டதற்கு இந்தியா கனத்த கவலையை வெளியிட்டுள்ளது.

வெளியார் குறுக்கீடு பயங்கரவாதத்திற்கு ஆதரவு ஆகியவை காரணமாகதான் காஷ்மீரில் நிலைமை பாதிக்கப்பட்டுள்ளது என இம்மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு புதுடில்லியின் கருத்துக்கள் தெளிவுபட கூறப்பட்டுள்ளது என்று செய்தியாளர்களிடையேபேசியஇந்தியவெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் விடயத்தை தெளிவாக புரிந்து கொள்ளாததினால் தான் இந்த மாநாட்டில் பேசியவர்கள் தேவையற்ற உள்நோக்கத்திலான கருத்தை தெரிவித்துள்ளார்கள் என்றும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த மாநாட்டின் அறிக்கைகளை இந்திய அரசு ஆராய்ந்து வருகிறது என்றும் இருதரப்பு உறவுகளில் இந்தியாவுக்கு எதிரான நிலையை மேற்கொண்டுள்ள நாடுகள் எவை என்பதையும் தம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் என்பதையும் புதுடில்லியில் இந்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கராச்சியில ஊரடங்கு

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானின் கராச்சி நகரத்தில இரண்டு போட்டிக்குழுக்களுக்கு இடையேஏற்பட்ட மோதலையடுத்து அங்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது, இந்த மோதல்களில் இதுவரை ஏழுபேர் கொல்லப்பட்டிருப்பதாகவும், தற்போது இராணுவத்தினரும், துணை இராணுவத்தினரும் இப்பகுதிகளில் ரோந்து சுற்றி வருவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

## சட்டத்தை அமுல்படுத்த மட்டுமே பொலிஸ்

(கொழும்பு)
சட்டத்தை இயற்றுபவர்கள் அரசியல்வாதிகள். அதனை முறையாக அமுல் நடத்தும் பொறுப்பு மட்டுமே பொலிசாருக்கு உண்டு என்று பாராளுமன்றத்தில் அவசர காலசட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கொழும்பு மாவட்ட எம்.பி. ஹட்சன் சமரசிங்கா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு செயற்பட பொலிசாரை அனுமதிக்கக் கூடாது எனவும் பொலிஸ் சேவைக்கு ஆட்களைத் திரட்டும் போது உயரத்தையும், உடலையும் சோதித்தால்மட்டும்போதாது தலையையும்சோதிக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

## மணலாறு தபாலகம் செயலிழப்பு

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், குமுழமுனை, அலம்பில் பகுதிகளில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளால் அப்பகுதிகளில் இயங்கி வந்த தபாலகங்கள் செயலிழந்துள்ளன.

பெருமளவில் மக்கள் வேறு இடங்களிற்கு இடம் பெயர்ந்துள்ளதால் இவர்களது நன்மை கருதி இத் தபாலகங்களை வேறு இடத்தில் இயங்கச்செய்யும் முயற்சியில் முல்லைத்தீவு மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. க. பரராசசிங்கம் ஈடுபட்டுள்ளார். (ச)

## விளையாட்டு அபிவிருத்திக்குழு
## பற்றிக்ஸ் மைதானத்தில் இன்று இறுதிப்போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டபிவிருத்திக்குழுவினால் மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட 61 கழகங்கள் பங்குபற்றிய பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று பி. ப. 3. 30 மணிக்கு யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாஷையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் இவ் இறுதிப்போட்டியில ஆட உள்ளது இதற்கு முன்னதாக யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கும், யாழ். மாவட்டத்தின் உதைபந்தாட்ட நடுவர்களுக்குமான காட்சி உதைபந்தாட்டப் போட்டி 2.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இப் போட்டியினைத் தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் இடம்பெறும். ஏற்கனவே நடைபெற்று முடிந்த வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் வெற்றியீட்டிய கழக வீரங்கனைகளுக்கான சான்றிதழ்களும், பதக்கங்களும் இன்றைய பரிசளிப்பு விழாவில் வழங்கப்படவுள்ளன.

## 26ஆம் திகதி சிறிலங்காவிற்கு கெடுநாளாம்

(கொழும்பு)
இம்மாதம் இருபத்தாறாம் திகதி நாட்டுக்கு மோசமான ஒரு நாளாக இருக்கும் என்று பாராளுமன்றத்தில் ரட்ணாயக்க எம். பி. கூறியுள்ளார். இந்தக் கூற்று குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டுமெனவும் நாட்டிற்கு ஏதோ தீங்கு நடக்கப் போகிறது எனவும் அவர் மேலும் கூறினார்.

## கட்டுப்பாட்டு பொருளாதார முறை
## உலக அரங்கிலிருந்து அகன்று வருகிறது

'லைசென்ஸ்வழங்கும் கட்டுப்பாட்டு பொருளாதார முறை சர்வதேச அரங்கில் அகன்று வருகிறது திறந்தசந்தைபொருளாதாரக் கொள்கையை நாம் பின்பற்றியிருக்காவிட்டால் இன்று எந்த நிலையில் இருந்திருப்போம்?' என நீதி உயர் கல்வி அமைச்சர் ஏ சீ எஸ். ஹமீது கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இன்று உலக வங்கியிடம் உதவி நாடிச் செல்லாமல் எத்தனை நாடுகள் இருக்கின்றன. உலக வங்கியிடம் உதவி நாடிச்சென்றால்பொருளாதாரத்தை எவ்வாறு வழி நடத்த வேண்டும் என்று அவர்கள் கூறும் யோசனைகளை ஏற்கத்தான் வேண்டும் தற்செயலாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்குவந்தால்கூட நாம்செய்து கொண்டிருக்கிற நடவடிக்கைகளைநிறைவேற்றுவர்கள்.

எனினும் அரசாங்கத்துக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையேநிரப்பமுடியாத தத்துவார்த்த இடைவெளி இருக்கிறது. இருகட்சிகளும் கடைப்பிடிக்கும்கொள்கைகள் வட - கிழக்கு பருவபெயர்ச்சி மழையையும் - தென்மேற்கு பருவப்பெயர்ச்சி மழையையும் ஒத்தது. இவை ஒருபோதுமே சந்திக்க முடியாதவை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உணவு உற்பத்தி அதிகரிக்க ஜப்பான் நிதி உதவி

(கொழும்பு)
இலங்கையின் உணவு உற்பத்தியினை அதிகரிப்பதற்காக ஜப்பான் 59 கோடி 30 இலட்ச ரூபாவை வழங்கவுள்ளது இதற்கான ஒப்பந்தம் ஒன்று கடந்த புதனன்று கைச்சாத்திடப்பட்டது.

ஜப்பானிய தூதுவர் இசுறு நிற்றாவும் நிதி அமைச்சின் செயலாளர் ஆர் பாஸ்கரலிங்கமும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

1977 ஆம் ஆண்டிலிருந்து ஜப்பான் இதற்காக வழங்கும் உதவியின் 16 வது தொடர் இதுவாகும். இதுவரையில் இதற்காக 1,172 6 கோடி ரூபாவை ஜப்பான் கடனாக வழங்கியுள்ளது.

ஜப்பான் வழங்கிய உதவியின் பெரும்பகுதி உரவகைகளைக் கொள்வனவு செய்வதற்கும் மிகுதி விவசாய இயந்திர சாதனங்களை கொள்வனவு செய்வதற்காகவும் செலவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மலையக இளைஞர்களை உடன் விடுவிக்கவும்

(கொழும்பு)
மலையகப் பகுதியில் கைது செய்யப்பட்ட இளைஞர்களை விடுவியுங்கள் அல்லது நீதிமன்றத்தின் முன்பு நிறுத்துங்கள் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; சந்தேகத்தின் பேரில கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக இளைஞர்கள் விடுதலை செய்யப்படவேண்டும், அல்லது அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் ஏதுமிருப்பின் நீதிமன்றத்தின் முன் நிறுத்துங்கள். இரண்டொரு வாரங்களில் இதற்கான தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கவிடம் தெரிவித்துள்ளார்.

## கட்சியிலிருந்து ராஜினாமா

ஜனாதிபதி வேட்பாளர் ராம் ஜெத்மலானி ஜனதா தள் கட்சியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார். இந்திய ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடும் இவர் ஜனதா தளம் எதிர்க்கட்சி வேட்பாளரை ஆதரிக்க எடுத்திருக்கும் முடிவை ஆட்சேபித்து கட்சியிலிருந்து ராஜினாமா செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டது

# இந்தியாவிற்கு உதவி வழங்க அமெரிக்கா கடும் நிபந்தனை

(டில்லி)
அமெரிக்க உதவி தேவையானால் அணு ஆயுதப்பரவல் தடையையும் மனித உரிமையையும் கடைப்பிடிக்கும்படி வாஷிங்டன் கூறியிருப்பதாக இந்தியாவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறினார்.

உதவி வெளிநாட்டமைச்சர் பெரஸிடா சாபர், நிதியமைச்சர் மன்மோகன்சிங் ஆகியோருக்கு இடையே நடைபெற்ற பேச்சின்போது அமெரிக்கா இது பற்றி தெளிவாக எடுத்துக் கூறியதாக அவர் தெரிவித்தார்.

அமெரிக்க காங்கிரஸின் நிர்ப்பந்தத்தினால் மனித உரிமை அணுசக்தி இரண்டையும் உதவியிலிருந்து பிரிக்கமுடியாமல் இருப்பதாக உதவி அமைச்சர் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

## ராஜீவ் கொலை வழக்கு குற்றப்பத்திரம் ஒப்படைப்பு

[சென்னை]
முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்திகொலை தொடர்பான குற்றப்பத்திரங்கள் சந்தேகநபர்களிடம்வழங்கப்பட்டுவிட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைத்துள்ளது. தற்போது தமிழ் நாட்டில் தடுப்புக் காவலில் உள்ள 26 சந்தேக நபர்களும் கடந்த புதன்கிழமை முதலாம் திகதிவரை மறியலில் வைக்குமாறு செங்கல்பட்டு திமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## வயிற்றோட்டத்தினால் சிறுமி உயிரிழப்பு

(புங்குடுதீவு)
என கூறப்படுகின்றது. உயி

## மலையக தொழிற் சங்கம் ஒன்றிணைய வேண்டும்

(நாவலப்பிட்டி)
மலையகத்தில் இரு பெரிய தொழிற்சங்கங்கள் இருக்கின்றன இவை தவிர சுமார் 86 000 பேர்களை அங்கத்தவர்களாககொண்ட 53 தொழிற்சங்கங்களும் இயங்கி

எல்.எம். அபுசாலி நாவலப்பிட்டி நகரசபை மண்டபத்தில் இலங்கை ஐக்கிய தொழிலாளர் காங்கிரசின் மூன்றாண்டைக் குறிக்கும் முதலாவது மாநாட்டில் கலந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

## முன்னாள் அமைச்சர் மீது ஐந்து குற்றச்சாட்டுகள்

...இரகசிய விசாரணைக்குட்படுத்தப் பட்டனர் இவ் விசாரணையின் முடிவிலேயே இக் குற்றப்பத்திரங்கள் இவர்களிடம் கையளிக்கப்பட்டது. இதே வேளை இச் சந்தேக நபர்கள் அனைவரையும் அடுத்தமாதம்

## தற்கொலை

...று காரணமாக அரலி விதை சாப்பிட்டு ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமடைந்தவராவார். (பா)

(புங்குடுதீவு)

வயிற்றோட்டத்தினால் சிறுமி ஒருத்தி உயிரிழந்துள்ளார். கெற்பலிப் பகுதி பண்டிதர் குடியிருப்பில் தங்கியிருந்த புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தேவதாஸ் மேரி ஜோசப்பின் (வயது - 7) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். வயிற்றோட்டத்தினால் பீடிக்கப்பட்ட இச்சிறுமி சில தினங்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பின்னர் நேற்று மரணமானார் என கூறப்படுகின்றது. உயிரிழந்த இச்சிறுமியின் குடும்பத்திற்கு இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகத்தினால் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. (22)

...வர்களாகக்கொண்ட 53 தொழிற்சங்கங்களும் இயங்கி வருகின்றன இச்சங்கங்கள் அனைத்தும் ஒரு சங்கமாக இயங்க வேண்டும் இதன்மூலம் தொழிற்சங்க பிரச்சினையை தீர்க்க முடியும்.

இவ்வாறு பெருந்தோட்ட சேவைகள் அமைச்சர் எம். ...மாநாட்டில் கலந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; வீண் விரயமாகும் அரச சொத்துக்கள், சம்பளத்திற்காக அரசு பெறும் கோடிக்கணக்கான வங்கி கடன் சுமையில் இருந்து விடுபடவும் பொறுப்புள்ள வசதி படைத்த உள்ளூர் கம்பனிகளிடம் வழங்கி இலாபத்தை அரசு பெறும் ஒரு மாற்றமே இந்த தோட்ட நிர்வாக மாற்றம் எனவும் தெரிவித்தார்.

## ஐந்து குற்றச்சாட்டுகள்

முன்னாள் ஜனாதிபதி றேகனை உலுக்கிய ஈரான் கொன்ரா ஊழல் சம்பந்தமாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் வெயின் பேர்ஜர் மீது ஐந்து குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன

ஊழல் சம்பந்தமான காங்கிரஸ் விசாரணையாளர்களுக்கு முட்டுக்கட்டையிட்டது பொய்யான அறிக்கைகளை வெளியிட்டது ஆகியன இக் குற்றச்சாட்டுகளில் அடங்கும்.

ஐந்தாண்டுகளாக விசாரணை நடத்திவரும் விசேட வழக்கு தொடுநர் லாரன்ஸ் வால்ஷினால் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் முதலாவது உயர் தர அதிகாரி வெயின் பேர்ஜர் ஆவார்.

இக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் 74 வயதான வெயின் பேர்ஜருக்கு ஆகக் கூடியது 25 ஆண்டு சிறைவாசமும் 12 லட்சத்து 50 ஆயிரம் டாலர் அபராதமும் விதிக்க இடமுண்டு.

1981 முதல் 1987 வரை வெயின் பேர்ஜர் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர்.

## வவுனியாவில்

# பிரிவுச்செயலர் அலுவலகம் அடுத்த மாதம் ஆரம்பம்

(வவுனியா)

சிறிலங்கா அரசின் நிர்வாகப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் வவுனியாவில் பிரிவு செயலாளர் அதிபர் அலுவலகம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் திரு. தில்லைநடராசா தெரிவித்தார்.

இத் திட்டத்தின் கீழ் வவுனியா தெற்கு தமிழ்ப்பிரிவு வவுனியாதெற்குசிங்களப்பிரிவு ஆகியவற்றில் பிரிவுச் செயலாளர் அதிபர் அலுவலகம் இயங்கத் தொடங்கவுள்ளது வவுனியாதெற்கு தமிழ்ப்பிரிவிற்கு பிரிவுச் செயலாளர் அதிபராக கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம். அமிர்தலிங்கம் நியமிக்கப்படலாம்என எதிர்பார்க்கப்படுகிறது

இதுவடக்கு கிழக்கில் ஆரம்பிக்கப்படும் முதலாவது அலுவலகம் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதேச

சபைகளிடம் ஒப்படைக்கப்படும் பிரதேச சபைகள் பொருளாதார நடவடிக்கைகளின் மையமாக விளங்கும் என்று ஜனாதிபதி கூறினார் என்று திரு ரணில் விக்கிரமசிங்க சொன்னார்.

## வீரச்சாவு

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துக் கொள்கின்றனர்.

## தமிழ்மொழி

முக்கியத்துவம் வாய்ந்தவையாக பணம் சம்பந்தப்பட்டவையாக இருப்பினும் அவற்றை சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கோ, திணைக்களங்களுக்கோ திருப்பி அனுப்பி விடும் தன்மான உணர்வும் துணிவும் எமக்கு ஏற்பட்டாலே நாம் வெற்றிகாண முடியும் எனவும் தெரிவித்தார்.

# மகனை பலிகொடுக்க முயன்ற தந்தை

தொழில் இல்லாத துருக்கியர் ஒருவர் தனது நான்கு வயது மகனை பலிகொடுக்க முயன்ற சம்பவம் ஒன்று துருக்கியில் இடம் பெற்றுள்ளது

கடந்தவாரம் இடம்பெற்ற சமய பெருநாளின்போது செம்மறி ஆடு ஒன்றைப் பலி கொடுக்க தன்னால் இயலவில்லைஎன்பதால் மகனையே பலிகொடுக்க இவர் முயன்றாராம்.

பொலிசார் இரண்டு ஆடுகளைக் கொடுத்து அந்த நபரின் பெயரால் பலிகொடுக்கச் சம்மதித்ததையடுத்தே அவர் மகனை விடுவித்தாராம்.

# சிறையில் உள்ளவரை விடுதலை செய்ய உத்தரவு

(கொழும்பு)

கடந்த 18 மாதங்களுக்கு மேலாக தடுப்புக்காவல் உத்தரவில் களுத்துறைசிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் தம்பிராஜா தேவராஜாவை உடனே விடுதலை செய்யும்படி சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஆனந்த சி. கிரேரோ உத்தரவிட்டார்.

32 வயதான தேவராஜா மின்சார சபையில் நிரந்தர ஊழியராக மின்சார தொழில் நுட்பவியலாளராக கடமையாற்றியவர்.

1990 நவம்பரில் திருக்கோணமலை பொலிஸ் அதிகாரிகளால் சீனன்குடா அகதி முகாமில் வைத்து இவர் கைது செய்யப்பட்டார். பின் சென்றவருடம் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவின்படி களுத்துறை சிறையில் வைக்கப்பட்டார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இவர் 18 மாதங்களுக்கு மேல் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஒருவரை 18 மாதங்களுக்குமேல் தடுத்துவைக்க முடியாது என்பதனால் நீதிபதி அவரை விடுதலை செய்துள்ளார்.

# மரண அறிவித்தல்

## திரு. நாகலிங்கம் சேனாதிராசா

*(Retired Police Inspector)*

பெரிய விளானைப் பிறப்பிடமாகவும் சிறுவிளானைச் சொந்த வதிவிடமாகவும் கொண்ட திரு. நாகலிங்கம் சேனாதிராசா (ஓய்வு பெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்) 20-06-92 சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு காலமானார். அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி ஸ்பரூபராணி சிறிஸ்கந்தா (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.), ஜெயராசா (கனடா), புஸ்பராணி (கனடா), தவமணி (கனடா), தயாளினி, ஜெயராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், துரைராசா சிறிஸ்கந்தாவின் அன்பு மாமனாரும், நிரோஷா, கௌஷிகா, ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (21-06-1992) ஞாயிறு பி. ப 2 30 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக சிறுவிளான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுவிளான்,
இளவாலை.
(2706)

தகவல்:
து. சிறிஸ்கந்தா
மருமகன்

# வாகன வரிசை இலக்கம் 20-06-1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம்:-4469

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதி வாகன வரிசை இலக்கம்:-3700

இராணுவம் அனுமதித்த இறுதி வாகன வரிசை இலக்கம்:-3655

வடபகுதிக்கு வெளியே செல்ல இராணுவம் அனுமதித்த வாகன இலக்கம்:-

42-2397. 26-5870, 42-9345, 26-7252, 24-415, 24-3594, 22-8096 26-9658 24-521, 41-7273 42-962. 41-7692, 26-9303, 42-2479, 24-5418, 28-1862, 42-1464, 27-9105, 24-917, 24-4476, 24-4323, 70-8358.

வடபகுதிக்கு உள்ளே செல்லஅனுமதித்த வாகனஇலக்கம்:- 24-6699, 26-4526, 26-4691, 27-8515, 27-9764, 28-1311, 26-5058, 41-9038, 40-1714, 24-6243, 22-7855, 24-4707, 26-6361, 26-6842, 24-6448, 26-3063.

19 06. 1992 வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கத்தில் 25-5140 என்பதனை 24-5140 என திருத்திக் கொள்ளவும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது